# பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை

## சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்.

மத்தேயு 5:9

செய்தி மலர்
2019
ஜூன்

மலர் : 16
இதழ் : 2

© CGWallpapers.com host JTLnet.com



# சபை ஊழியரின் அன்பு மடல்



கிறிஸ்துவுக்குள் அன்பான திருச்சபை குடும்பத்தாரே எல்லாம் வல்ல இறைவன் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் எல்லோரும் நலமாக இருப்பீர்கள் என்று விசுவாசிக்கிறேன். என்னுடைய ஆவலும், அனுதின ஜெபமும் அதுவே. கடந்த மே மாதம் முழுவதும் நம்மை கண்மனி போல பாதுகாத்த தேவன் இந்த ஜூன் மாதத்திலும் சகல ஆசீர்வாதத்திற்குள்ளும் வழி நம் சபையை வழி நடத்துவார் என்பதில் எள்ளவும் ஐயமில்லை.

ஜூன் மாதம் என்றாலே புதிய துவக்கத்தின் மாதமாக அமைகிறது. நம்முடைய பிள்ளைகள் புதிய வகுப்புகளுக்கு செல்வார்கள். புதிய சூழ்நிலைகள் புதிய எதிர்பார்ப்புகள் எதிர்காலம் எப்படியிருக்குமோ என்ற கேள்விகள் எல்லாம் உள்ளத்தை குழப்பும்போது நாம் முற்றிலுமாக கர்த்தரை சார்ந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாயிருக்கிறது. இதைக்குறித்து வேதம் என்ன சொல்லுகிறது என்று கீழ் வரும் பகுதிகளில் விளக்கமாக பார்க்கலாம்.

வேதம் கூறுகிறது "ஓடுகிறதற்கு வேகமுள்ளவர்களின் வேகமும் யுத்தத்திற்கு சவுரியவான்களின் சவுரியமும் போதாது. பிழைப்புக்கு ஞானமுள்ளவர்களின் ஞானமும் போதாது. ஐசுவரியம் அடைகிறதற்கு புத்திமான்களின் புத்தியும் போதாது. தயவு அடைகிறதற்கு வித்துவான்களின் அறிவும் போதாது. அவர்கள் எல்லாருக்கும் சமயமும் தேவச் செயலும் ஏற்படவேண்டும்" என்று (பிரச–9:11) ஆக தேவ செயலே எல்லாவற்றையும் செய்ய வல்லது என்பது நிச்சயம். ஆகவே கர்த்தரை சார்ந்து கொள்வோம். அவரே நமக்கு ஜெயம் கொடுக்கிறவர்.

## I. தேவ செயலே நிலைக்கும்......

நம் வாழ்க்கையில் எந்த தீர்மானத்தை எடுத்தாலும் தேவச் சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்து காரியங்களை நடத்துகின்றபொழுது அது நமக்கு ஆசீர்வாதங்களை கொண்டு வரும். இதை தன் வாழ்க்கையில் உணர்ந்து கொண்ட பக்தனாகிய யோபு சொல்கிறார் " தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர் நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்பதை அறிந்திருக்கிறேன்" என்று. (யோபு–42:2) மிகப்பெரிய ஞானியாகிய சாலமோன் சொல்கிறார் "தேவன் செய்வது எதுவோ அது என்றைக்கும் நிலைக்கும் என்று அறிவேன். அதனோடே ஒன்றும் கூட்டவும் கூடாது அதிலிருந்து ஒன்றும் குறைக்கவும் கூடாது. மனுஷர் தமது சமூகத்தில் பயந்திருக்கும்படி தேவன் இப்படி செய்து வருகிறார். மனுஷன் புசித்துக் குடித்து தன் பிரயாசத்தின் பலனை அனுபவிப்பதைப் பார்க்கிலும் அவனுக்கு ஒரு நன்மையும் இல்லை. இதுவும் தேவனுடைய கரத்திலிருந்து வருகிறது என்று கண்டேன்" என்று. (பிரச–2:24, 3:14)

இயேசு சொன்னார் "என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது" என்று (யோவா–15:5) " உன் செய்கைகளை கர்த்தருக்கு ஒப்புவி அப்பொழுது உன் யோசனைகள் உறுதிப்படும்" (நீதி–16:3) "மனுஷருடைய இருதயத்தின் எண்ணங்கள் அநேகம் ஆனாலும் கர்த்தருடைய யோசனையே நிலை நிற்கும்" (நீதி–19:21) "கர்த்தராலே மனுஷருடைய நடைகள் வாய்க்கும்" (நீதி–20:24) என்று சாலோமோன் ஞானியும் குறிப்பிடுகிறார்.

ஆகவே நம்முடைய சொந்த சிந்தனைகளுக்கும் விருப்பங்களுக்கும் இடம் தராமல் கர்த்தருடைய சித்தத்திற்கு காத்திருக்கும்போது செம்மையான வழியிலே கர்த்தர் நம்மை நடத்துவார்.

## 1. சுய புத்தியின் மேல் சாயாதே

மனுஷருடைய வழியெல்லாம் அவன் பார்வைக்கு செம்மையாக தோன்றும் கர்த்தரோ இருதயங்களை நிறுத்துப் பார்க்கிறார். கர்த்தருக்கு விரோதமான ஞானமுமில்லை, புத்தியுமில்லை, ஆலோசனையுமில்லை (நீதி–21–2,29) மனுஷனுக்கு செம்மையாய் தோன்றுகின்ற வழியுண்டு முடிவோ மரண வழிகள் (நீதி–14:12) ஆகவே கர்த்தரை நாம் சார்ந்து கொள்ளும் போது நமக்கு ஒரு பாதுகாப்பு கிடைக்கிறது. கர்த்தரின் நாமம் பலத்த துருகம். நீதிமான அதறகுள் ஓடிச் சுகமாய் இருப்பான். (நீதி–18:10) கர்த்தரின் நாமத்தை விடாமல் பற்றிக்கொள்வதே நமக்கு ஜீவ வழி. இந்தப் பாதையில் இடறல்கள் ஒன்றுமிருக்காது. மன சமாதானமும் சந்தோஷமும் நம்பிக்கையும் நமது உள்ளங்களில் எப்போதும் காணப்படும்.

"உன் சுய புத்தியின் மேல் சாயாமல் உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து உன் வழிகல் எல்லாம் அவரை நினைத்துக்கொள். அப்பொழுது அவர் உன் பாதைகளை செவ்வை படுத்துவார்" (நீதி–3:5,6) தன் சுய புத்தியை சார்ந்த சவுலரசன் அமலேக்கியரின் கொழுமையான மாடுகளையும் ஆடுகளையும் தனக்காக வைத்துக்கொண்டான் அதனால் அரசாட்சியையே இழந்தான். ஆனால் தாவீதோ எப்பொழுதும் கர்த்தரை சார்ந்து கொண்டிருந்தபடியால் அவனுடைய இராஜ்ஜிய பாரம் ஸ்திரப்பட்டது. நாமும் கூட எப்போதும் சுய புத்தியை சாராமல் எல்லா ஞானத்திற்கும் ஊற்றும் காரணருமாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையே சார்ந்து கொள்வோம். அப்போது ஒருபோதும் நாம் இடற மாட்டோம். "அவர் நம்மை புல்லுள்ள இடங்களில் மேய்த்து அமர்ந்த தண்ணீர்களன்டையில் நம்மைக் கொண்டு போய் விடுகிறார் (சங்கீ–23:2)

மனுஷருடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும் தன்னுடைய நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன் என்று எரேமியா குறிப்பிடுவதை கவனத்தில் கொள்வோம். (எரேமி–10:23)

## 2. உலக பெலத்தை நாடாதே .

சிலர் உலக பெலன்களாகிய அதிகாரம், சரீர பெலன், ஆள் பெலன், அறிவு இவைகளை சார்ந்து கொண்டு பெருமை பாராட்டுவார்கள். ஆனால் இவைகளெல்லாம் இறுதியில் தோல்வி அடையும். இதை உணர்ந்து அறிவடைந்து சிந்தனை தெளிகின்ற போது வாழ்க்கையில் எல்லாமே நடந்து முடிந்திருக்கும் அதன் பிறகு மனந்திருந்தி

பிரயோஜனம் என்ன? சிம்சோனுடைய முடிவு அப்படித்தான்இருந்ததது. அவன் தன் சொந்த பெலத்தை பெருமையாக எண்ணினான் அதனால் தோல்வியடைந்தான். வேதம் கூறுகிறது " அவர் குதிரையின் பெலத்தில் விருப்பமாயிரார். வீரனுடைய கால்களில் பிரியப்படார் தமக்கு பயந்து தமது கிருபைக்கு காத்திருக்கிறவர்கள் மேல் கர்த்தர் பிரியமாயிருக்கிறர் என்று (சங்கீ-147:10,11) ஆகவே தான் தாவீது சொல்கிறார் "சிலர் இரதங்களை குறித்தும் சிலர் குதிரைகளை குறித்தும் மேன்மை பாராட்டுகிறார்கள். நாங்களோ எங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தக் குறித்தே மேன்மை பாராட்டுவோம். அவர்கள் முறிந்து விழுந்தார்கள், நாங்களோ எழுந்து நிமிர்ந்து நிற்கிறோம்" (சங்கீ-20:7,8)

"எந்த ராஜாவும் தன் சேனையின் மிகுதியால் இரட்சிக்கப்படான் சவுரியவானும் தன் பலத்தின் மிகுதியால் தப்பான். இரட்சிக்கிறதற்கு குதிரை விருதா அது தன் மிகுந்த வீரியத்தால் தப்புவியாது. ஆனால் தமக்கு பயந்து தம்முடைய கிருபைக்கு காத்திருக்கிறவர்களுக்கு கர்த்தர் துணையும், கேடகமுமாயிருக்கிறார்" என்று (சங்கீ-33:16-20)

மேலும் பவுல் சொல்கிறார் "நடுகிறவனாலும் ஒன்றுமில்லை, நீர் பாய்ச்சுகிறவனாலும் ஒன்றுமில்லை விளையச் செய்கிற தேவனாலே எல்லாம் ஆகும்" (1-கொரி-3:7) "விரும்புகிறவனாலும் அல்ல ஓடுகிறவனாலுமல்ல இரங்குகிற தேவானாலேயாம்" (ரோம-9:16) இதை உணர்ந்த தாவீது சொல்கிறார். "என் வில்லை நம்பேன் என் பட்டயம் என்னை இரட்சிப்பதில்லை" என்று (சங்கீ-44:6) அதனால் தான் தலைமுறை தலைமுறையாய் தாவீதின் சந்ததி இன்று வரை ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறது. அந்த சந்ததியில் தான் இயேசு கிறிஸ்துவும் தோன்றினார்.

ஆகவே பிரியமாணவர்களே, நம் வாழ்க்கையில் பிள்ளைகளை குறித்து எதிர்கால தீர்மானங்கள் எடுக்க வேண்டியிருந்தாலும், வேறு முக்கியமான முடிவுகள் எடுக்க வேண்டியிருந்தாலும், அது நம் வேலையைக் குறித்ததானாலும், நம் குடும்பத்தை குறித்ததானாலும், எல்லாவற்றிலும் நாம் கர்த்தரையே சார்ந்து கொள்வோம். அவர் ஆலோசனையில் ஆச்சரியமானவர் செயலில் மகத்துவமுள்ளவர். (ஏசா-28:29) அவர் நமக்கு போதித்து நாம் நடக்க வேண்டிய வழியை நமக்கு காண்பித்து சமாதானத்தின் பாதையில் நம்மை நடத்துவார் (சங்கீ-32:8)

கர்த்தர் தாமே நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதித்து இந்த மாதம் முழுவதும் ஜெயத்தோடு வழி நடத்துவாராக.

கர்த்தரின் பணியில்,

அன்பு சகோதரன்

**சகோ. ஸ்டாலின்**

## சகோதரிகள் பகுதி

# சமாதானம் பண்ணுகிறவர்களாயிருங்கள்

**கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக!**

சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கிவான்கள்,அவர்கள் தேவனுடை புத்திர்கள் எனப்படுவார்கள்" மத் 5:9

நீங்கள் சமாதானம் பண்ணுகிறவர்களாயிருக்கிறபடியால் தேவனுடைய புத்திரர் என்றழைக்கபடுகிறீர்கள் என்று கர்த்தருடைய வார்த்தை கூறுகிறது. சமாதானம் இல்லாமல் தவிக்கிறவர்கள் சமாதானத்தை பெற்றனுபவிக்கும்படி கர்த்தருடைய இயேசு கிறிஸ்து இப்பூமியில் வந்தார். அவர் சிலுவையில் அறையப்படும் வேளை வந்த போது தம்முடைய சீஷர்களிடத்தில், "சமாதானத்தை உங்களுக்கு வைத்து போகிறேன், என்னுடைய சமாதானத்தயையே உங்களுக்கு கொடுக்கிறேன் உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்கு கொடுக்கிறதில்லை" என்று கூறினார்.

## சமாதானப் பிரபு

கர்த்தராகியஇயேசுகிறிஸ்து"சமாதானப்பிரபு" என்றழைக்கப்பட்டார்(ஏசாயா 9–6) சமாதானப் பிரபு உங்கள் வாழ்க்கையை ஆளுவாராரெனில், நீங்களும் சமாதானம் பண்ணுகிறவர்களாய் மாறுவீர்கள். கர்த்தரால் பாக்கியவான்கள் என்று அழைக்கபடுவீர்கள். சமாதானத்தை தங்கள் வாழ்க்கையில் வெளிபடுத்துகிற சமாதானம் பண்ணுகிறவர்களை கர்த்தர் தம்முடைய சொந்த பிள்ளைகள் என்றழைக்கிறார். சமாதானம் பண்ணுகிறவர்களின் உள்ளத்தில் எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம் ஆளுகை செய்கிறது, மற்றவர்களுக்கு சமாதானத்தை வெளிபடுத்தி அவர்கள் சமாதானமுள்ளவர்களாக வாழ செய்ய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தை அவர்கள் சுமந்து செல்கிறார்கள்.

அன்பானவர்களே, இன்று நம்முடைய "சுபாவம்" எப்படி இருக்கிறது? நாம் செல்லுகிற இடமெல்லாம் தேவனுடைய சமாதானத்தை சுமந்து செல்கிறோமா? ஒரு வீட்டிற்குள் பிரவேசித்தால், அதற்குள் சமாதானத்தை விட்டு செல்கிறோமா? அல்லது குழப்பத்தை விளைவித்து விட்டு வெளியேறுகிறோமா? சமாதானத்தின் குணாதிசயத்தை வெளிபடுத்தி அதனை தங்கள் வாழ்க்கையில் செயல்படுத்துகிறவர்களாயிருந்து அதன் மூலம் கிறிஸ்துவை அறிகிற அறிவிற்குள் அநேகரை கொண்டு வருகிற தம்முடைய பிள்ளைகளை கர்த்தர் நேசிக்கிறார். எனவே தேவனுடைய பிள்ளைகள் என்று அழைக்கப்பட விரும்புகிறவர்களாயின், சமாதானம் பண்ணுகிறவர்களாய் இருப்போம். தேவன் நம் மூலமாகவும், நம்முடைய சபை மூலமாகவும் நாமும், நாம் வாழும் சமுதாயத்தையும். கர்த்தர் சமாதானமுள்ளதாகவும், ஆசீர்வாதமாகவும் மாற்ற வல்லவராய் இருக்கிறார்

கர்த்தர் தாமே இந்த வார்த்தைகளை ஆசீர்வதிப்பாராக

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரி

**எப்சிபா ஸ்டீஃபன் ஜெயகுமார்**

## இயேசு கிறிஸ்துவின் இரத்தம்

இஸ்ரவேல் நாட்டில் ஜாஃபா என்ற இடத்தில் பிரசித்திப் பெற்ற ஊழியர் பென்னிஹின் ஐயா அவர்கள் வீடு உள்ளது. அவர் சிறுவயதில் இருக்கும் போது அவர் வீட்டில் மேல் மாடியில் திரு அன்னா அவர்களின் குடும்பத்தினர் அவர் வீட்டில் தங்கி இருந்தார்கள். அப்பொழுது பென்னிஹின் தகப்பனாரும் அன்னா அவர்களும் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டார்கள். ஒரு கூர்மையான கத்தியை எடுத்து மணிகட்டில் இரத்தம் கசியும் வரை அறுத்து, பின்னர் இரத்தம் வழிந்தவுடன் இருவரின் மணிகட்டுகளை ஒருகிணைந்து இருவரின் இரத்தமும் ஒன்றாய் இணைய வைத்து மேஜையின் மீது இரண்டு கண்ணாடி டம்ளர்களில் திராட்சை ரசம் வைக்கபட்டிருந்த டம்ளருக்குள் இரத்தம் விழுமளவில் இரண்டு பேரும் கையை உயர்த்தி பிடித்தார்கள் இதைத்தம் டம்ளருக்குள் விழும், விழுந்த இரத்தத்தை கலக்கி மாறி மாறி குடித்து கொள்கிறார்கள். அந்த நிமிடத்தில் இருந்து இருவரும் இரத்த சம்மந்த சகோதரர்களாக மாறி விடுகிறார்கள். கிழக்கிந்திய நாட்டு கலாச்சாரங்களிலும் உலகின் பல்வேறு பகுதிகளிலும் இரண்டு மனிதர்களுக்கிடையே உடன்படிக்கை செய்து கொள்கிறார்கள். மனுகுலத்திற்கென்று தேவன் வகுத்துள்ள திட்டத்தில் சிருஷ்டிப்பின் வரலாறு இர்த்த உடன்படிக்கையின் ஆரம்பத்தை சுட்டி காட்டுகிறது.

முதலில் தேவன் மனிதனை பூமியின் மண்ணினாலே உருவாக்கினார்.(ஆதி 2:7)

அவர் தரையிலிருந்து மண்ணை எடுத்து சேறுண்டாக்கி அதை பிசைந்து ஒரு வடிவத்தை உண்டாக்கினார். அதே நேரத்தில் நமது இரத்தத்தையும் சிருஷ்டித்தார். தேவன் சிருஷ்டிக்கும் போது மற்றுமொறு ஆச்சர்யமான காரியம் லேவி 17:11 –ன் படி மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது. தேவன் ஆதாமுக்குள் ஜீவ சுவாசத்தை ஊதினவுடனே இவனுக்குள் தேவனுடைய இரத்தம் உற்பத்தியானது. பல நூற்றாண்டுகளாக மருத்துவ விஞ்ஞானம் இரத்தத்தின் செயல் முறையை ஆராய்ந்து வந்தது நமது சரீரத்தின் ஒவ்வொரு உறுப்புகளிலும் ஆக்ஸிஜன் மற்றும் உணவை சுமந்து சென்று எல்லா இணைப்புகளிலும் பாய்ந்து செல்கிறது. எந்த நோய்க்கும் தற்காப்பாகவும் செயல்படுகிறது. ஆனால் தேவன் இரத்தத்தில் வைத்துள்ள முக்கியத்தை அறியவில்லை.

### ஜெபத்தில் இரத்தத்தை பயன்படுத்த வேண்டும்.

நீங்கள் அடிமைதனத்திலிருந்து விலகி வெற்றியோடு வாழ விரும்பினால் தேவனுக்கு கீழ்படிய வேண்டும். முதல் பஸ்கா பண்டிகைக்கு முன்பு கர்த்தர் நீங்கள் இருக்கும் வீட்டில் அந்த இரத்தம் உங்களுக்கு அடையாளமாய் இருக்கும் யாத் 12:13. அடையாளம் என்ற சொல் தோரம் என்று பொருள்படும் இந்த அடையாளம் இருந்த வீடுகளை தேவன் பாதுகாத்தார். உங்களுக்கு அந்த அடையாளத்தை காணும் போது தேவன்பாதுகாப்பார் நாம் ஒவ்வொரு நாளும் ஜெபிக்க வேண்டும் தேவனுடன் நாம் ஐக்கியபடவேண்டும். ஒவ்வொரு நாளும் பரிசுத்த ஆவியானவர் என்னை புதிதாக நிறைக்கும்படி ஜெபிக்க வேண்டும். அடிமைதனத்தினால் அல்ல தேவனுடன் உள்ள ஐக்கியத்தினால் மூடும்படி தொடர்ந்து கேட்கவேண்டும்.

### இரத்தத்தினால் மூடுவது என்றால் என்ன?

கிறிஸ்துவின் சிலுவையினால் கிடைத்த பலன்களாகிய பாதுகாப்பு உரிமை பாவ மன்னிப்பு தேவ கிருபையின் பாதுகாப்பு, மீட்பு ஒப்புரவாகுதல், சுத்திகரித்தல்,பரிசுத்தமாக்குதல், மற்றும் தேவ பிரசன்னம், ஒவ்வொரு நாளும் காலையில் சரீரத்தை அர்ப்பணிக்க வேண்டும்.இரத்தத்தினால் மூடும்படி கேட்பது ஒரு சடங்காச்சர்யமாக இல்லாமல் தேவன் நம்முடன் ஏற்படுத்தியுள்ள இரத்த உடன்படிக்கையின் பலனாக கேட்க்க வேண்டும், இரத்தம் உங்களை தானாகவே மூடாது, தேவன் வானத்திலிருந்து இறங்கி வந்து உங்கள் வீட்டின் மேல்

இரத்த அடையாளத்தை பூச மாட்டார். நீங்கள் பாதுகாப்பிற்காக கேட்க வேண்டும் தேவையை கொடுக்கிறவர். ஆனால் நாம் மத்தேயு 21:22ன்படி விசுவாசமுள்ள ஜெபத்தினால் கேட்க வேண்டும்..

## நடந்த சம்பவம் 1

ஒரு முறை ஒரு குறிப்பட்ட ஓர் ஊரின் பக்கத்தில் உள்ள கிராமத்திற்கு ஒரு ஊழியர் இன்னும் ஒரு சிலராய் சேர்ந்து ஊழியத்துக்கு சென்றிருக்கிறார்கள், அங்குள்ள மக்களை சந்தித்த ஒரு குறிப்பிட்ட தெரு பகுதியில் ஜனங்களை உட்கார வைத்து பாடல்களை பாடி இயேசுவை பற்றி சொல்லி கடைசி நேரத்தில் எல்லாருக்காகவும் ஜெபித்திருக்கிறார்கள், ஜெபம் முடிந்ததும் இரண்டு பெண்கள் ஆசுத்த ஆவியினால் பிடிக்கபட்டு ஆடிக்கொண்டிருந்தார்கள். இயேசுவின் பெயரை சொல்லி அதை போக சொல்லி இருக்கிறார்கள், ஆனால் அவைகள் போகவில்லை. பாடல்களால் ஓட்ட முயற்சி எடுத்தும் போகவில்லை. கடைசியாக தேவன் அவர்களுக்கு தேவனுடைய இரத்தத்தினால் மூடும் படி உணர்த்தினார். இரண்டு பெண்கள் மீது கை வைத்து இயேசுவின் இரத்தத்தினால் மூடும் ஆண்டவரே என்று சொல்லி ஜெபித்தார்கள் மாற்கு 9:26ன் படி செத்தவர்களை போல கீழே விழுந்திருக்கிறார்கள். அசுத்த ஆவி அவர்களை விட்டு ஓடியதாம்.

## நடந்த சம்பவம் 2

ஒரு போதகர் ஒரு வாடகை வீட்டில் தங்கி இருந்திருக்கிறார். அவர் தங்கியிருந்த வீட்டில் மற்றுமுள்ள அறைகளில் வாடகைக்கு வரும் ஊர்காரர்கள் யாரும் ஒரு மாதத்திற்கு மேல் யாரும் இருப்பதில்லை ஏனென்று விசாரிக்கும் போது அந்து வீட்டில் எதோ ஏவல் மற்றும் பில்லி சூன்யம் வைத்துள்ளதாகவும், அதனால் இரவில் தூங்கமுடியாமல் அது அவர்களை பயமுறுத்துவதாக உள்ளது ஆகவே அவர்களால் தொடர்ந்து தங்க முடியவில்லை என்று கூறினார்களாம். போதகரிடம் நீங்கள்மட்டும் எப்படி தங்கி இருக்கிறீகள் என்று கேட்டார்களாம், அதற்கு போதகர் நாம் ஒவ்வொருநாள் இரவும் உறக்கத்திற்கு முன் ஆண்டவரிடத்தில் ஆண்டவரே உம்முடைய இரத்தத்தை கொண்டு இந்த வீட்டின் மேல் பூசுங்க இரத்தத்தினால் மூடுங்க என்று சொல்லி ஜெபித்துவிட்டு உறங்க செல்வோம் என்று சொல்லி இருக்கிறார். அருமையான தேவ பிள்ளைகளே நாமும் ஒவ்வொரு நாளும் உறங்க போகும் முன் ஜெபிக்கும் போது இயேசுவின் இரத்தம் நமக்கு பாதுகாப்பாக இருக்கும்

மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது; நான் அதை உங்களுக்குப் பலிபீடத்தின்மேல் உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும்படிக்குக் கட்டளையிட்டேன்; ஆத்துமாவிற்காகப் பாவநிவிர்த்தி செய்கிறது இரத்தமே. (லேவி 17:11)

### 1. மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது.

பிரசித்தி பெற்ற ஒரு மாவட்டத்தில் ஒரு கிரமத்தில் ஒரு குடும்பம் சந்தோஷமாக வாழ்ந்து கொண்டிருந்தனர். கணவனும் மனைவியும் ஒற்றுமையாக இருப்பார்கள். சில நாட்கள் கழித்து கணவர் வேறொரு பெண்ணோடு உறவு வைத்திருந்தார். இது மனைவிக்கு தெரிய வருகிறது, அதனால் சந்தோஷமாக இருந்த குடும்பத்தில் தினமும் சண்டை நடக்கும். கள்ள தொடர்பு வைத்திருந்த அந்த பெண் அந்த ஆணிடம் உங்கள் மனைவி நமது உறவு இடஞ்சலாக இருக்கிறாள் உங்கள் மனைவியை கொலை செய்து விட்டு என்னை வந்து பாருங்கள் என்று சொல்லி அனுப்பிவிடுகிறாள்.

ஒரு நாள் பட்ட பகலில் தூங்கி கொண்டிருந்த தன் மனைவியின் கழுத்தை ஒரு ஆட்டை அறுப்பது போல் அறுத்துவிட்டார்,அறுத்துவிட்டு என் மனைவியை யாரோ கொலை செய்துவிட்டார்கள் என்று ஊர் மக்களிடம் சொல்லி அழுதிருக்கிறார். ஊர் மக்கள் வந்து பார்த்த போது வீடு முழுவதும் இரத்தம். உடம்பிலுள்ள எல்லா இரத்தமும் வெளியே வந்து விட்டது உயிரும் போய் விட்டது.

விபத்து ஏற்படும் போதும், மனிதன் கொலை செய்யபடும் போதும், வியாதியினால் இரத்தம் குறையும் போதும் உயிர் போய்விடுகிறது. இஸ்ரவேல் புத்திரரிலும் உங்களுக்குள் தங்குகிற

அந்நியர்களிலும் எவனாகிலும் புசிக்கத்தக்க ஒரு மிருகத்தையாவது ஒரு பட்சியையாவது வேட்டையாடிப் பிடித்தால், அவன் அதின் இரத்தத்தைச் சிந்தப்பண்ணி, மண்ணினால் அதை மூடக்கடவன்.(லேவி 17:13) மற்றும் சகல மாம்சத்திற்கும் இரத்தம் உயிராயிருக்கிறது ஆகையால் எந்த மாமிசத்தின் இரத்தத்தையும் புசிக்க கூடாது அதை புசிக்கிறவன் ஆறுப்புண்டு போவான்.

அருமையான தேவ ஜனமே இஸ்ரவேல் ஜனங்களுக்குள் அப்படி இருந்தது. ஆனால் இன்றைக்கு இயேசுவின் இரத்தத்தை குடிக்கலாம், பூசலாம் இயேசுவின் இரத்தத்தை சொல்லி ஜெபிக்கலாம்.

## நடந்த சம்பவம்

50 வயது மதிக்கதக்க ஒரு பெரியவர் நீண்ட நாட்களாக உடல் நல குறைவால் படுத்த படுக்கையாய் இருந்ததால் அந்த பகுதி ஜனங்கள் அவர்கள் வழக்கத்தின்படி பாலை வாயில் ஊற்றினால் இறந்துவிடுவார். அந்த நிலையில் உயிருக்காக போராடிக்கொண்டிருந்தார். அது கிறிஸ்மஸ் காலமாக இருந்தபடியினால் கீதபவனி வந்திருக்கிறார்கள் அவர்களிடம் அந்த பகுதி மக்கள் இங்கு ஒரு பெரியவர் உயிருக்கு போராடிக் கொண்டிருக்கிறார். வந்தவர்களில் ஒரு மூப்பர் ஒரு டம்ளர் தண்ணீரை எடுத்து இயேசப்பா இந்த தண்ணீரை இரத்தமாக மாற்றுங்க என்று சொல்லி ஜெபித்து அவருக்கு கொடுத்திருக்கிறார், இயேசுவின் இரத்தம் அவருக்குள் சென்றது என்ன ஆச்சர்யம் இன்றைக்கும் உயிரோடு இருக்கிறார். இயேசுவின் இரத்தத்தில் உயிர் இருக்கிறது ஆமென்!

## 2. ஆத்துமாவிற்காக பாவ நிவர்த்தி செய்கிறது இரத்தம் :

லேவி 9:7. மோசே ஆரோனை நோக்கி: நீ பலிபீடத்தண்டையில் சேர்ந்து, கர்த்தர் கட்டளையிட்டபடியே, உன் பாவநிவாரண பலியையும் உன் சர்வாங்க தகனபலியையும் செலுத்தி, உனக்காகவும் ஜனங்களுக்காகவும் பாவ நிவிர்த்தி செய்து, ஜனங்களுடைய பலியையும் செலுத்தி, அவர்களுக்காகவும் பாவ நிவிர்த்தி செய் என்றான்.(லேவி 9:8) அப்பொழுது ஆரோன் பலிபீடத்தண்டையில் சேர்ந்து, தன் பாவநிவாரண பலியாகிய கன்றுக்குட்டியைக் கொன்றான்.

9:9. ஆரோனின் குமாரர் அதின் இரத்தத்தை அவனிடத்தில் கொண்டுவந்தார்கள்; அவன் தன் விரலை அந்த இரத்தத்தில் தோய்த்து, பலிபீடத்தின் கொம்புகளின்மேல் பூசி, மற்ற இரத்தத்தைப் பலிபீடத்தின் அடியிலே ஊற்றி இப்படியாக ஜனங்களின் ஆத்துமாவிற்காக பாவ நிவர்த்தி செய்ய காளையின் இரத்தம், இஸ்ரவேல் ஜனங்கள் ஆட்டுகுட்டியின் இரத்தத்தையும் பலி பீடத்தின் அடியிலே ஊற்றுகிறார்கள்.

## இயேசுவின் இரத்தம் :

இஸ்ரவேல் ஜனங்களை ஆத்துமாவிற்காக பாவ நிவர்த்தி செய்ய காளையின் இரத்தம். எனக்கருமையான தேவ ஜனமே சிலுவையில் உயிர்த்து 3 ஆம் நாள் உயிரோடெழுந்த இயேசுவின் இரத்தம் நமக்காக பாவ நிவர்த்தி செய்கிறது, இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும் 1 யோ 1:7

உங்கள் பாவங்கள் செக்க செவேலென்றிருந்தாலும் உறைந்த மழையைபோல் வெண்மையாகும். அவைகள் அரத்தாம்பரம் போல சிவப்பாயிருந்தாலும் பஞ்சைபோலாகும் ஏசாயா 1:18 கர்த்தருடைய ஜனமே இயேசுவினிடத்தில் நம் பாவங்களை அறிக்கையிட்டு உம்முடைய இரத்தத்தினால் என்னை கழுவும் என்று கேட்கும் போது, மன்னித்து அவருடைய இரத்தத்தினால் கழுவி நம்மை பரிசுத்தமாக்குவார்.

இயேசுவின் இரத்தம் சாத்தானை துரத்திடும் வெளி 12:11 இயேசுவின் இரத்தம் சுகம் தரும். இயேசுவின் இரத்தம் அதிசயம் செய்திடும், சாபங்களை நீக்கிடும், வெற்றியை தரும், பெலவீனத்தை நீக்கும், எபிரேயர் 12:24ன் படி நமக்காக பரிந்து பேசும், எபேசியர் 2:16ன்படி ஒப்புரவாக்கிடும் மற்றும் இஜ்ரவேல் ஜனங்களுக்கு ஆட்டு குட்டியின் இரத்தம் பாதுகாப்பாக இருந்தது. இன்றைக்கு இயேசுவின் இரத்தம் நமக்கு பாதுகாப்பாக இருக்கிறது.

இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்.(வெளி 7:14)

## இரத்த சான்றிதழ்

முக்கியமாக மே மாதங்களில் எல்லா சபைகளிலும் VBS CBS என்று சிறுபிள்ளைகளுக்கு விடுமுறை வேதாகமம் பள்ளி பயிற்சி நடக்கிறது. அது முடிந்தவுடன் சான்றிதழ் கொடுப்பார்கள். உலகத்தின் பிரகாரம் வாழ்கிறவ்களுக்கு உண்மையாய் வாழ்கிறவர்களுக்கு உலகம் கொடுக்கும் சான்றிதழ் பிழைக்க தெரியாதவன், கேனையன் இவன் வாழ்வதே வேஸ்ட் இப்படியெல்லாம் சொல்லுவார்கள். வேதத்தில் ஒரு பாத்திரம்

**யோபு 1:1** அந்த மனுஷன் உத்தமனும் சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாயிருந்தான். அவனுக்கு அவன் மனைவி கொடுத்த சான்றிதழ் தேவனை தூஷித்து ஜீவனை விடு என்று சொன்னாள்.

**ஸ்தேவான்:** என்கிற தேவ மனிதனை நகரத்திற்கு புறம்பே தள்ளி பிரதான ஆசாரியனும், ஜனங்களும், ஒருமனபட்டு ஸ்தேவானை கல்லெரிந்தார்கள், ஸ்தேவான் முழங்காற்படியிட்டு ஆண்டவரே, இவர்கள் மேல் இந்த பாவத்தை சுமத்தாதிரும் என்று மிகுந்த சத்தமிட்டு சொல்லி நித்திரையடைந்தான், (அப் 7:55:66 )இது அவருக்கு கொடுத்த சான்றிதழ்.

## பவுல் என்கிற தேவ மனிதர்:

யூதர்களால் ஒன்று குறைய நாற்பதடியாக ஐந்துதரம் அடிக்கபட்டார்.கல்லால் அடிக்கப்பட்டார் 3 முறை கப்பல் சேதத்தில் இருந்தார் அநேக முறை பிரயாணம் பண்ணினார், கள்ளரால் மோசம், ஜனங்களினால் மோசம், பிரயாசத்திலும்,வருத்தத்திலும் அநேக முறை கண்விழிப்பிலும், பசியிலும், தாகத்திலும், உபவாசங்களிலும், குளிரிலும், நிர்வாணத்திலும், இதை காட்டிலும் எல்லா சபைகளை குறித்தும் கவலை என்னை நாள்தோறும் நெருக்கிறது .2 கொரி 11:20-28 வரை அன்பான தேவ ஜனமே இப்படியே நாம் இந்த தேவ மனிதர்களை போல நாம் பூமியில் வாழும்போது வெளி 7 ஆம் அதிகாரத்தில் சொன்னது போல பரலோகத்தில் வெள்ளை அங்கிகளை தரித்திருக்கிற இவர்கள் யார்? எங்கே இருந்து வந்தார்கள் என்று கேட்பார்கள். நம்மை பார்த்து சொல்லுவார்கள். அவர்கள் மிகுந்த உபத்திரவத்தில் இருந்து வந்தவர்கள். ஆட்டு குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள் என்று நமக்கு சான்றிதழ் கொடுக்கப்படும்

நல்ல சாட்சி நமக்கு இருந்தால் இரத்த சான்றிதழ் நமக்கு கொடுக்கபடும். பரலோகத்தில் சந்தோஷமாக வாழலாம்.

**வெண்ணங்கி தரித்து தூதர்களோடு இணைந்து தேவனை துதிப்போம்!**

**ஆமென்**

**கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக**

**"நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; " (ஆதி – 12:2)**

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

செல்வி. ஜெஸ்லி டேனியல்
செல்வி. ஆஸ்லின் கெசியா
செல்வி. சிராக் மெர்சிலின் மேஷாக்
செல்வி. ஹேனா ஷாரோன்
செல்வி.பியூலா கலியமூர்த்தி
செல்வி.ஜெயபாரதி பாண்டியன்
செல்வி. ரேஷ்மா அசோக்குமார்
செல்வி. நோயல் யோவா தாமஸ்
செல்வி. ஜெய்னி டேனியல்
செல்வி.ரெபேக்கா ஜாண்போஸ்க்கோ
செல்வன். மெல்வின் ஸ்டீவ் மேஷாக்
செல்வன். தாபன்குமார் ஜெயசீலன்
செல்வன். கிங்ஸ்டன் ரிச்சர்ட்சன்
செல்வன். ஜேக்கப் ஜெயக்குமார்
செல்வன். ராயன் சதீஷ்குமார்
செல்வன். ஜூயன் லின்சன் ஜெபசிங்
செல்வன். சாமுவேல் ஸ்டாலின்
செல்வன். ஜெய்சன் பாலகிருஷ்ணன்
செல்வன். ஸெர்வின் சிவகுமார்
செல்வன். ஜோஷ்வா தோனி
செல்வன். ஜோஷ்வா ஜான்ஸன்
செல்வன். ஆகாஸ் கிதியோன்
செல்வன். ரனால்டோ ஜோசப்
செல்வன். நிபதின் ஹரி'ஷ்
செல்வன். ஜாண் ஜெரேமியா மில்லர்
சகோதரி. அனிதா ஆரோக்கியதாஸ்
சகோதரி. ஜெகதாம்பாள் ராஜவேல்
சகோதரி. நிர்மலா யேசுதாஸ்
சகோதரி. அனிதா ஜெஸ்டின்
சகோதரி. நித்யா ரோஸ் ஜோன்ஸ்
சகோதரி . பிரவீனா லாசர்
சகோதரி. வளர்மதி அல்போன்ஸ்
சகோதரி. டெய்சி ரோஸ் எபெநேசர்
சகோதரி. ஸோபியா மேஷாக்
சகோதரி. ஷீபா பிரசாத்
சகோதரி.இசைவாணி வில்கின்ஸன்
சகோதரி.பிரிமிதா ரூத் பிருகிதா
சகோதரி. பாக்கியா ரவிஜாண் பீட்டர்
சகோ. வெங்கடேஷ் ராஜன்
சகோ. அருள்
சகோ. பாபு. D
சகோ. ராபின்ராஜ்
சகோ. ஜெசீலன் .C
சகோ. ஜெஸ்டின்
சகோ. ஜஸ்டிஸ் விஜல் குமார்
சகோ. பிரசாத் சுந்தரரேசன்
சகோ.பிபின் ரிச்சர்ட்
சகோ. வெங்கடேஷ் ஜெபராஜ்
சகோ. கிரன் குமார்
சகோ. ஆன்டனி பாபு
சகோ. பக்தராஜ்
சகோ.அந்தோனி சாமி
சகோ.கிறிஸ்டோபர் . M
சகோ. ஜஸ்டின்
சகோ. பால் பாண்டியராஜ்

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

திருமதி & திரு. பால் ஜெகநாதன்
திருமதி & திரு.லாவண்யா வினோத்குமார்
திருமதி & திரு.அஜுஷா ரமேஷ்
திருமதி & திரு. சதீஷ்குமார். E
திருமதி ரு திரு. சுப்ரமணி கோவிந்தராஜுலு
திருமதி & திரு. M. யேசுதாஸ்
திருமதி & திரு. டேவிட்ஜெயகுமார்
திருமதி & திரு. ஐசக்துரை
திருமதி & திரு. மகேஷ் ராஜ்

# 2019 ஜுன் மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை நேரம் மாலை 5:00 முதல் 6:15 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 02/06/2019 | சகோ. தாமஸ் | சகோ. பிரசாத் |
| 09/06/2019 | சகோ. ஆராக்கியராஜ் | சகோ. ஆரோக்கியதாஸ் |
| 16/06/2019 | சகோ. ஜினு | சகோ. கிறிஸ்டோபர் |
| 23/06/2019 | சகோ. ஐசக்துரை | சகோ. ஜெயசேகர் |
| 30/06/2019 | சகோ. டேவிட் ஜெயகுமார் | சகோ. சுகுமார் |

## வெள்ளி ஆராதனை நேரம் மாலை 4:00 முதல் 5:45 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 07/06/2019 | சகோ. ஐசக்துரை | சகோ. ஜெகநாதன் |
| 14/06/2019 | சகோ. எபிநேசர் | சகோ. சாமுவேல் தாசையா |
| 21/06/2019 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 28/06/2019 | சகோ. வில்ஸன் | சகோ. அசோக்குமார் |

**பொதுமன்ற கூடுகை**
7/06/2019 (இடம் பரிசுத்த பவுல் ஆலயம் அஹமதி)
(மாலை ஆராதனைக்கு பின் )

**முழு இரவு ஜெபம்**
13/06/2019 (இடம் பரிசுத்த பவுல் ஆலயம் அஹமதி)
(நேரம் இரவு 10:00 மணி முதல் அதிகாலை 2:00 மணி வரை)

**சகோதரிகள் ஐக்கிய கூடுகை**
(22/06/2019–அன்று நேரம் 6:30 to 8:30(இடம் : ஜெப வீடு ஃபாஹீல் )
நிகழ்ச்சி ஞீழளெநச சகோதரி டெய்சி எபிநேசர் அவர்கள்

**28/06/2019 வாலிப ஐக்கிய கூடுகை**
நேரம் 6:30 to 8:30 (இடம் : ஜெப வீடு ஃபாஹீல் )
(வேத வினா பகுதி உபாகமம் புத்தகத்தில் இருந்து கேள்விகள் கேட்கப்படும் )

## ஸ்டான்லி ஜோன்ஸ் (1884-1973)

இந்திய மக்களுக்கு அவர்களது கலாச்சாரம் பண்பாடு பழக்கவழக்க முறைகளை மாற்றாமல் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து அவர்களை கிறிஸ்துவின் பிள்ளைகளாக்க முயற்சி எடுத்தவர் ஸ்டான்லி ஜோன்ஸ். கிறிஸ்தவத்துடன் ஒன்றறக் கலந்திருந்த மேற்கத்திய கலாச்சாரத்தைப் பிரித்து எடுத்து இந்திய மக்களுக்கு கிறிஸ்துவை மட்டும் கொடுத்தவர். அறிவியியல் சம்பந்தமான விரிவுரைகளை வழங்கி சுவிசேஷம் சொல்ல அதை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தியவர் அவர். 1884-ம் ஆண்டு மேரி லேண்டு என்ற இடத்தில் பிறந்தார். தன்னுடைய கல்லூரி நாட்களிலேயே தன்னார்வ மாணவர்கள் என்ற இயக்கத்தில் இணைந்து, வெளிநாட்டிற்கு மிஷனெரியாகப் போக தீர்மானித்தார்.

ஆப்பிரிக்கா தேசத்தில் மிஷனெரியாகப் பணிபுரிந்த டேவிட் லிவிங்ஸ்டனைத் தேடிப்போன ஸ்டான்லி என்பவரின் வாழ்வு டேவிட் லிவிங்ஸ்டனின் சந்திப்பினால் மாற்றப்பட்டதை அறிந்த ஜோன்ஸ் தானும் ஆப்பிரிக்கா தேசத்திற்கு மிஷனெரியாக போக வாஞ்சைகொண்டார். ஆனால் ஜோன்ஸ் அங்கம் வகித்த மிஷனெரிச் சங்கம் இவரை இந்தியாவுக்கு மிஷனெரியாக அனுப்பத் தீர்மானித்தது. லக்னோவில் உள்ள ஆங்கிலம் பேசும் திருச்சபையினருக்கு அபிஷேகம் பண்ணப்பட்ட மெதடிஸ்ட் போதகராக 1907-ல் நியமிக்கப்பட்டார். ஆரம்ப நாட்களில் ஞாயிற்றுக்கிழமைகளில் சபையில் பிரசங்கித்தும் மற்ற நேரங்களில் ஹிந்தி மொழியை கற்கவும் செலவழித்தார்.

மூன்று வருடத்திற்குப் பிறகு சீதாபூர் என்ற இடத்திற்கு அவர் அனுப்பப்பட்டு ஏழை எளியோர் ஒதுக்கப்பட்ட மக்களின் நடுவில் வாழ்ந்து ஊழியம் செய்தார். அந்நாட்களில் இந்தியாவில் மிஷனெரிப்பணி பெரும்பான்மையாக ஏழ்மையான ஒதுக்கப்பட்ட மக்கள் மத்தியில்தான் நடந்தது. ஆனால் ஸ்டான்லி ஜோன்ஸ்க்கோ தங்களை உயர் ஜாதியினர் என அழைத்துக்கொள்வோர் மற்றும் அறிவியல் சிறந்தவர்கள் மத்தியில் பணிபுரிய வேண்டும் என பாரம் ஏற்பட்டது. படித்தவர்கள், உயர்ஜாதி மக்கள் மத்தியில் ஊழியம் செய்வது ஒரு சவாலாக அவருக்கு இருந்தது. தனது ஒன்பதாண்டுகால பணியில் சுவிசேஷத்திற்கு வாஞ்சைகாட்டும் சில முக்கிய அறிவாளிகளின் தொடர்பு அவருக்குக் கிடைத்தது. அதன்பின் தனது மிஷனெரி விடுப்பிற்காக தனது தேசம் சென்று திரும்பிய அவர் மனநோயால் கஷ்டப்பட்டார். அதன்பின் ஒரு ஆழமான ஆவிக்குரிய அனுபவத்தைப் பெற்று இனம்புரியாத தெயவீக சமாதானத்தால் நிரப்பப்பட்டார். படித்த செல்வாக்குமிக்க மக்கள் மத்தியில் ஒரு சுவிசேஷகனாகப் பணிபுரிய ஆரம்பித்தார்.

இந்தியாவிலும், இந்திய எல்லைப் பகுதியில் உள்ள அண்டை தேசங்களுக்கும் சென்று கிறிஸ்துவைக் குறித்த செய்திகளைப் பிரசிங்கித்தார். கிறிஸ்துவை மட்டுமே அவர் போதித்தார். கிறிஸ்தவம் மேற்கித்திய மதம் என்று வெறுத்து ஒதுக்கிய படித்த உயர்ஜாதி மக்களுக்கு மேற்கத்திய உலக மக்களின் இரட்சகராக இந்தியப் பண்பாட்டிலே தர பெரும் முயற்சி செய்தார் ஜோன்ஸ்.

தனது ஒவ்வொரு உரையாடலிலும் கிறிஸ்துவே ஆவிக்குரிய வாழ்விற்கு சிறந்த மாதிரி என்று கூறினார். கிறிஸ்தவ ஆசிரம முறையிலும் மேற்கத்திய பழக்கவழக்கங்களை துறந்து முழுமையாக இந்திய சமூக வாழ்க்கை முறையைப் பின்பற்றினார். ஜாதி, சமூக வேறுபாடுகளைக் களைந்து அனைவரும் சமமாக இருக்கவும் ஆசிரம வாழ்வு வழிவகுத்தது. 1940-ம் ஆண்டில் 24 கிறிஸ்தவ ஆசிரமங்களை இந்தியா முழுவதிலும் அவர் நிறுவினார். இந்திய உயர் சமுதாயத்திற்கு கிறிஸ்துவைத் தர ஸ்டேன்லி ஜோன்ஸ் ஒரு வித்தியாசமான அணுகுமுறை கொண்ட சுவிசேஷகனாகப் பணியாற்றியதால் ஒரு மதிப்பிற்குரிய தனி மனிதனாக இந்தியாவிலும், உலகம் முழுவதும் போற்றப்பட்டார். மகாத்மா காந்தி, நேரு போன்றவர்களின் நண்பனாகவும் இருந்தார். இந்தியாவில் 40 வருடங்கள் மிஷனெரியாகப் பணிபுரிந்தார்.

ஒருமுறை ஜப்பான் தேசத்திற்குச் சென்று கூட்டங்கள் நடத்தினபோது தேசத்தின் எல்லா பகுதரியிலிருந்தும் திரளான மக்கள் வந்து கலந்து கொண்டதோடு சுமார் பத்தாயிரம் பேர் தாங்கள் திறிஸ்துவிற்காக வாழத் தீர்மானித்தனர். 1938-ம் ஆண்டு சென்னையில் நடந்த உலகத் திருச்சபையின் மாநாட்டிலும் முக்கியப் பங்கு வகித்தார். கிறிஸ்துவின் பூரணத் தன்மையையம் சுவிசேஷத்தின் சிறப்பையும் எடுத்துக்கூறி இயேசு கிறிஸ்துவைப் பலருக்கு அறிமுகப்படுத்தி அவர்கள் தாங்களாகவே அவரை வேதவசனம் மூலம் முழுமையாக அறிந்துகொள்ள வழி ஏற்படுத்தினார். இந்தியப்பாதையில் கிறிஸ்து என்ற அவரது புத்தகம் பெருமளவில் எல்லாராலும் போற்றி வாசிக்கப்பட்டது.

1973-ல் அவரது மரணம் வரை ஒரு உத்தமமான கிறிஸ்தவ ஊழியக்காரனாக இருந்து தேவ பணி செய்து பல இந்திய மிஷனெரி ஸ்தாபனங்களுக்கு முன் மாதிரியான ஊழியப்பாதையைக் காண்பித்தார். இன்று நம் தலைமுறையில் வாழும் இந்திய தேசத்தின் படித்த அறிவாளிகளைக் கிறிஸ்துவின் சுவிசேஷத்தால் சந்திக்கும் பாரம் நம்மில் உண்டா? இந்திய பாரம்பரியம் மற்றும் கலாச்சாரம் கறைபடாமல் நமது மக்களுக்கு ஏற்றபடி சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க நம்மிடம் உருப்படியான திட்டங்கள் உண்டா? என்பதை ஸ்டான்லி ஜோன்ஸின் ஊழியப்பாதை சிந்திக்க வைக்கிறது.

கர்த்தரின் பணியில்,

S.சுகுமார்

# 2019 ஜுன் மாதத்திற்கான வேத வினா!

1. திவ்விய சவுந்தர்யமுள்ளவனாயிருந்தவன் யார்?

2. எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தவன் யார்?

3. ஒருமனப்பட்டு ஜெபத்தில் தரித்திருந்தவர்கள் யார்?

4. மந்தையை தப்பவிடாத கொடிதான ஓநாய்களைபற்றி வாசிப்பதெங்கே ?

5. வேதாமங்களில் வல்லவன் எனப்பட்டது யார்?

6. கர்த்தருக்கு அவர்களை ஒப்புவித்தார்கள் அவர்கள் யார் ?

7. யாருடைய முகம் தேவதூதன் முகம் போலிருந்தது?

8. சகல பட்டினங்களிலும் சுவிஷேசத்தை பிரசங்கித்துக் கொண்டு வந்தவர் யார் ?

9. அந்தியோகியாவிலே சஞ்சரித்து, கர்த்தருடைய வசனத்தை உபதேசித்து பிரசங்கித்து கொண்டிருந்த இருவர் யார் ?

10. தகப்பன் கிரேக்கன், தாய் யூதஸ்திரி, இவர்களுக்கு பிறந்த மகன் யார்?

11. இரத்தாம்பரம் விற்று வந்த ஒரு ஸ்திரி யார்?

12. பவுலை வாயில் அடியுங்கள் என்று சொன்ன பிரதான ஆசாரியன் யார்?

13. தன் வீட்டாரோடு இயேசுவை விசுவாசித்து ஏற்றுக் கொண்ட ஜெபாலயத் தலைவன் யார்?

14. நியாசனத்துக்கு முன்பாக அடிபட்ட ஜெபாலயத் தலைவன் யார்?

15. கிறிஸ்துவின் சீஷர்களை ஜெப ஆலயங்களில் வைத்து அடித்தவன் யார்?

விடைகளை வருகின்ற 20-06-2019 க்குள் சபையின் செயலாளரிடமோ அல்லது செய்திமலர் பொருப்பாளரிடமோ நேரில் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.. அல்லது விடைகளை (Whatapps # 66015503 என்ற எண்ணிற்கு அனுப்பவும்) விடைகளை வேதாகமத்தில் அப்போஸ்தலர் 1,6,7,8,10,14,15,18,20,22,23,. ஆகிய அதிகாரங்களில் இருந்து பதிலைத் தேடுங்கள் )

(குறிப்பு) செயற்குழு உறுப்பினர் அல்லாது மற்றவர்களிடம் விடைத்தாள் கொடுக்கும்பட்சத்தில் ..அந்த விடைத்ததாளுக்கு செய்திமலர் பொறுப்பாளர் பொறுப்பல்ல,

## தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்;

மத்தேயு 7:7

## 2019 ஏப்ரல் மாத வேத வினாவுக்கு பதில்

1. சாலொமோன் I இராஜா 10: 24,25
2. எலியா– I இராஜா 19: 4
3. ரெகோபெயாம் I இராஜா 12:11
4. யெசபேல் ஆகாபை I இராஜா 21:25
5. உம்ரி I இராஜா 16: 24
6. தாவீது I இராஜா 2:2
7. சாலொமோன் I இராஜா 10: 17
8. சேபாவின் ராஜ ஸ்திரீ I இராஜா 10: 12
9. எலியா I இராஜா 17:9–11
10. ஈயேல் I இராஜா 16:34
11. அபியாம் I இராஜா 15:1 – 3
12. அகியா I இராஜா 11 : 29
13. ஆசா I இராஜா 15 : 14

### ஆதியாகமம் ஒரு பார்வை

எழுதியவர் : மோசே
எழுதப்பட்ட காலம் : கிமு 1450 கிமு 1410
அதிகாரங்கள் –50
வசனங்கள்– 1533
பெரிய அதிகாரம் 24 வசனம்–67
சிறிய அதிகாரம்–16 வசனம்–16

**முக்கிய கதாபாத்திரங்கள்**

அதாம், ஏவாள், காயீன், ஆபேல், நோவா,ஆபிரகாம்,சாராள், ஈசாக்கு,ரெபெக்காள், யாக்கோபு, யோசேப்பு,

**முக்கிய இடங்கள்**

ஏதேன் தோட்டம்,அராரத்மலை பாபேல், ஊர், ஆரோன்,சீகேம் எபிரோன், பெயர்செபா,எகிப்து

## 2019 ஏப்ரல் மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis. சுகந்தி தம்பு குமார்
Sis. பத்மினி வர்கீஸ்
Sis. லதா கிறிஸ்டோபர்
Sis. ஜீவி பாக்கியவதி வேதானந்தம்
Sis. செலின் டேவிட் ஜெயகுமார்
Sis. ஜோனா அசோக்குமார்
Sis. பிரிசில்லா செங்குட்டுவன்
Sis. அனிதா திவ்யராஜ்
Sis. ஹெலன் சாஜிதா ராபின்
Sis. சாந்தி

### 1 முதல் 11 அதிகாரங்கள்

படைப்பு,
ஆதாம் ஏவாள் பாவமும் வீழ்ச்சியும்
பெருவெள்ளம்
தேசங்கள் தோன்றுதல்

முக்கியஅதிகாரம் 15,17,22
திறவுகோல் வசனங்கள்:
3:15–12:2,3

கர்த்தரே ஆவியானவர்; கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு. ( 2 கொரி 3:17)

கிறிஸ்துவுக்குள் அன்பான திருச்சபை குடும்பத்தாரே எல்லாம் வல்ல இறைவன் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாலிபர்களின் சார்பாக வாழ்த்துகளை தெரிவித்து கொள்கிறோம்.

## தேவ சித்தம் செய்த வாலிபர்கள்

வேதத்தில் தேவ சித்தம் செய்த அநேக வாலிபர்களை நாம் காண்கின்றோம் இன்றைய தினத்திலும் ஒரு சில வாலிபர்களை குறித்து நாம் தியானிக்கலாம் .

## யோசுவாவின் வைராக்கியம்

மோசேவுக்கு உடன் உழியக்காரனாய் யோசுவா இருந்தார். மோசே எங்கு சென்றாலும் அவருக்கு உறுதுணையாக இருந்தார்.
ஒரு முறை கர்த்தர் மோசேயோடு கூட கூடாரத்துக்குள் முகமுகமாய் பேசினார். மோசே திரும்ப வரும்வரை யோசுவா கூடாரத்தை விட்டு பிரியாதிருந்தார் (யாத் 33:11). யோசுவா கர்த்தருக்காய் வைராக்கியமாய் இருந்ததினால் கானான் தேசத்தை சுற்றிப் பார்க்கும்படி மோசே தெரிந்துகொண்ட மனிதர்களில் ஒருவராய் யோசுவா இருந்தார் (எண்ணா–13:16)

யோசுவா கர்த்தருக்காக வைராக்கியமாய் இருந்ததால் அவருடைய வாழ்க்கையில் அவர் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்கள் அனேகம்.

முதலாவது மோசேவுக்கு பிறகு ஜனங்களை வழிநடத்துகிற தலைவனாக யோசுவாவை கர்த்தர் தெரிந்துகொண்டார். இரண்டாவது யோசுவா கானான் தேசத்திற்குள் பிரவேசிக்க கர்த்தர் கிருபை செய்தார். மூன்றாவது கானான் தேசத்தை எல்லாக் கோத்திரங்களுக்கு பிரித்துக் கொடுக்கின்ற ஸ்தானாதிபதியாக தெரிந்துகொண்டார்.

## காலேப்பின் விசுவாசமும் & உத்தமுமம்

கானான் தேசத்தை சுற்றிப் பார்ப்பதற்கு கர்த்தர் அனுப்பிய மனிதர்களில் காலேபும் ஒருவராக இருந்தார். தேசத்தை சுற்றிப் பார்த்துவிட்டு வந்த 10 கோத்திரத்தின் மனிதர்கள் நாம் அங்கு செல்ல முடியாது அந்த தேசத்தின் ஜனங்கள் மிகவும் பலவான்களாக இருக்கிறார்கள். அங்கு ஏனாக்கின் குமாரர்கள் உள்ளனர் மீறி சென்றால் நம்மை கொன்று விடுவார்கள் என்று தங்களுக்குள்ளே விசுவாசமில்லாமல் சூழ்நிலையைக் கண்டு மிகவும் பயந்தார்கள். ஆனால் எப்புன்னேயின் குமாரனாகிய காலேப் (எண்ணா–13:30) மோசேக்கு முன்பாக ஜனங்களை அமர்த்தி நாம் உடனே போய் அந்த தேசத்தை

சுதந்தரித்துக்கொள்வோம். நாம் அந்த தேசத்தை எளிதாய் ஜெயித்துக்கொள்ளலாம் என்றார். அதற்கு அந்த மனிதர்கள் இல்லை அவர்கள் மிகவும் பெரிய ஆட்கள் நாம் அவர்களுடைய பார்வைக்கு வெட்டுக்கிளிகளை போல் இருக்கிறோம் என்று சொல்லி புலம்பினார்கள். இதைக் கேட்ட காலேப் தன்னுடைய வஸ்திரங்களை கிழித்துக்கொண்டு நாம் போய் சுற்றிப் பார்த்த கானான் தேசம் மகா நல்ல தேசம் (எண்ணா–14:6) கர்த்தர் நம்மை அங்கு கொண்டு சேர்ப்பார். அதனால் நீங்கள் கர்த்தருக்கு விரோதமாக மாத்திரம் கலகம் பண்ணாதிருங்கள் என்று விசுவாசத்தோடே கூறினார்.

காலேபின் விசுவாசத்தைக் கண்ட தேவன் அவரை பற்றி சொன்ன காரியம் என்னவென்றால் (எண்ணா–14:24) என்னுடைய தாசனாகிய காலேப் வேறே ஆவியையுடையவனாய் இருக்கிறபடியினாலும், உத்தமமாய் என்னை பின்பற்றி வந்தபடியினாலும் அவன் போய் வந்த தேசத்திலே அவனைச் சேரப்பண்ணுவேன். அவன் சந்ததியார் அதை சுதந்தரித்துக்கொள்வார்கள். இதுமட்டுமல்ல கர்த்தருடைய பார்வையில் காலேப் உத்தமமாய் இருந்தபடியால் கோத்திரங்களுக்கு கொடுக்கவேண்டிய ஒரு பட்டணத்தை தனி மனிதனான காலேப்புக்கு கர்த்தர் கொடுத்தார் (யோசு–14:14)

## அழைப்பில் உண்மையாகவும் உறுதியாகவும் இருந்த யோவான் ஸ்நானகன்

தேவன் அழைத்த அழைப்பின்படி யோவான் தன் 30 வயதில் (வாலிப பருவம்) மனந்திரும்புதலுக்கான ஊழியம் செய்து ஞானஸ்நானம் கொடுத்தார். அந்நாட்களில் யூதர்கள் யோவானிடம் நீர் யாரென்று கேட்டார்கள்? அதற்கு யோவான் மறுதலியாமல் அறிக்கையிட்டதுமன்றி, தான் கிறிஸ்து அல்ல என்றும் அறிக்கையிட்டார். யோவானுக்கு எத்தனையோ முறை அழைத்த அழைப்பிலிருந்து (ஊழியம்) மனம் மாறுவதற்கான சூழ்நிலை வந்தது. பின்னும் ஒருமுறை யூதர்கள் நீர் யார்? எலியாவா, தீர்க்கதரிசியா என்று கேட்டார்கள் (யோவா–1:21) அதற்கு அவர் நான் கர்த்தருக்கு வழியை செவ்வை பண்ணுங்கள் என்று ஏசாயா தீர்க்கதரிசி சொன்னபடியே நான் வனாந்திரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தமாயிருக்கிறேன் என்றார்.

மீண்டும் அவருக்கு சோதனை வந்தது பரிசேயர்கள் அவரை நோக்கி நீர் கிறிஸ்துவுமல்ல, எலியாவுமல்ல, தீர்க்கதரிசியுமல்ல பின்ன யார்? என கேட்டார்கள் (யோவா–1:25) அவர்களுக்கு யோவான் பிரதியுத்தரமாக அவர் எனக்கு பின் வந்தும் என்னிலும் மேன்மையுள்ளவர் அவருடைய பாதரட்சையின் வாரை அவிழ்ப்பதற்கும் நான் பாத்திரனல்ல என்றார். எந்த அளவிற்கு யோவான் அழைப்பில் (ஊழியத்தில்) உண்மையுள்ளவராய் இருந்தாரென்றால் (யோவா–3:30) அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும்

என்று கூறினார். அழைப்பில் (ஊழியத்தில்) உண்மையாகவும் உறுதியாகவும் இருந்ததினால் தேவன் யோவானுக்கு கொடுத்த மேன்மையான காரியம் தீர்க்கதரிசியைக் காட்டிலும் மேன்மையுள்ளவன் (மத்-11:9) ஸ்தீரிகளிடத்தில் பிறந்தவர்களில் யோவானைப் பார்க்கிலும் பெரியவன் ஒருவனுமில்லை (மத்-11:11) மற்றும் வருகிறவனாகிய எலியா இவன்தான் என்றார் (மத்-11:14)

இன்றைக்கு அனேகர் தங்களை தேவன் ஊழியத்திற்கு அழைத்த நோக்கத்தை விட்டு வழி விலகி தங்களுக்கு மேன்மையை தேடுகிற காரியத்தை நாம் இந்த உலகில் காண்கிறோம். இப்படி பட்டவர்கள் மேல் தேவன் பிரியமாய் இரார்.

## பிதாவின் சித்தம் செய்த இயேசு கிறிஸ்து

ஒருவரும் சேரக்கூடாத ஒளியில் வாசம் செய்கின்ற தேவன் நமக்காக இந்த பூமியில் வந்து பிறந்தார். இயேசு கிறிஸ்து இதை செய்ததினால்தான் நாம் இன்றைக்கு பாவத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம்.

## இயேசு கிறிஸ்துவின் ஊழியம்

வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம் செய்வான்? உம்முடைய வசனத்தின்படி தன்னை காத்துக் கொள்வதினால்தானே (சங்கீ-119:9) இந்த வார்த்தையின்படி கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தன்னுடைய 30 வயதில் (வாலிப பருவம்) ஞானஸ்நானம் எடுத்து ஆத்தும பாரத்தோடும் அர்ப்பணிப்போடும் பிதாவின் சித்தம் செய்யத் துவங்கினார். எத்தனை பிசாசின் சோதனை நிந்தனை வந்த போதிலும் பிதாவின் சித்தம் செய்வதை விட்டு அவர் பின் வாங்கவில்லை. தன்னுடைய வாலிப பருவத்திலே (33.5 வயது) உலகத்தில் பிறந்த பிறக்க போகிற மனிதர்களுக்காக சிலுவையிலே தன்னை மரிக்கவும் ஒப்புக்கொடுத்தார்.

நாமும் கூட மேலே கூறப்பட்ட வாலிபர்களான யோசுவா, காலேப், யோவான் ஸ்நானகன் மற்றும் கர்த்தரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவை போல் வைராக்கியமாகவும், விசுவாசமாகவும், உத்தமுமாகவும், உண்மையாகவும், ஆத்தும பாரம் உள்ளவர்களாகவும் நம்மில் அனேகர் வாலிப பருவத்திலே ஊழியத்தை துவங்கியும், துவக்கியிருக்கின்றோம். ஆனால் இவர்களைப் போல் மரண பரியந்தம் நாம் வாழ்வோமா? என்று சிந்திப்போம்.

கர்த்தரின் பணியில்,
அன்பு சகோதரர்

R.பிரசாத்

# கடந்த மாத நிகழ்வுகளில் சில உங்கள் பார்வைக்கு

















உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்காக ஜெபியுங்கள்

செயற்குழு உறுப்பினர்கள்

சபை ஊழியர் – சகோ. ஸ்டாலின்

66021072

செயலாளர் – சகோ. ஆரோக்கியதாஸ்

99870126

பொருளாளர்– சகோ. எபநேசர்

23922058 - 50203472

பெண்கள் ஐக்கிய தலைவி

சகோதரி . பியூலா ஜெகநாதன்

60797360

வாலிப ஐக்கிய தலைவர் –

சகோ. ஆரோக்கியராஜ்

66159784

Church Website Address – ahmaditamilcongregation.org

Church 'E' mail ID – ahmaditamil.kw@hotmail.com

Church Postel Address

Your name - Po. Box no 46795. 64018, fahaheel ,Kuwait

தங்களுக்கு வாகன வசதி தேவைபடும் பட்சத்தில் நீங்கள் சகோதரர் ஜான்ஸன் அவர்களை தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ள படுகிறோம்

அவரது தொலை பேசி எண்

97610275

Private Circulation only